**03.12.2024**

**CC-331/2022**

அரசுதரப்பு சாட்சி **- 8-**சித்ரா

**1** ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

**Accused A1- A5 present**

பொதுவாகசட்டப்பிரிவு 50 ன் படி குற்றத்தில் சம்பந்தப்பட்ட எல்லா குற்றவாளிகளையும் சோதனை செய்து சம்மத கடிதம் பெறவேண்டும் என்றால் சரிதான். எங்கள் காவல்நிலையத்திற்கு எதிரிகள் அழைத்து வரப்பட்டபின்னர் நான் எந்த சம்மத கடிதமும் பெறவில்லை என்றால் சரிதான். கியூபிராஞ்ச் ஆய்வாளர் 1 ம் எதிரியிடமிருந்து பெறப்பட்டதாக சொல்லப்படும் சம்மதக்கடிதம் எதற்காக மற்ற குற்றவாளிகளை விடுத்து பெறப்பட்டது என்றோ, மற்ற குற்றவாளிகளிடம் ஏன் பெறப்படவில்லை என்றோ தன்னுடைய தனி அறிக்கையிலும், விரிவான அறிக்கையிலும், வாக்குமூலத்திலும் அவர் சொல்லவில்லை என்றால் சரிதான். 57 வது பிரிவில் தயார் செய்யப்படும் அறிக்கையானது உயர் அதிகாரிகளுக்கு பிரிவு-57 ன் படி 48 மணி நேரத்தற்குள் அனுப்பி வைக்கவேண்டும் என்பது சட்டமாகும் என்றால் சரிதான். அந்த அறிக்கை தயார் செய்யப்படும்போது அந்த அறிக்கை எத்தனை மணிக்கு, எங்குவைத்து, யாரால் தயார் செய்யப்பட்டது. யார்மூலமாக அல்லது எதன் மூலமாக உயர் அதிகாரிக்கு அனுப்பிவைக்கப்பட்டது எந்த உயர் அதிகாரிக்கு அனுப்பப்பட்டது, எந்த உயர் அதிகாரி பெற்றுக்கொண்டார், எத்தனை மணிக்கு பெற்றுக்கொண்டார், என்ற விபரங்களும் துலங்கவரும் என்றால் சரிதான். நான் அனுப்பிய 57 வது பிரிவின் படியான அறிக்கை 5 வது குற்றவாளியை மட்டும நான் கைது செய்ததால் அதற்காக மட்டும் தயார் செய்து அனுப்பினேன் என்றால் சரிதான்.

மற்ற நான்கு குற்றவாளிகளை கியூபிராஞ்ச் ஆய்வாளர் கைது செய்ததால் அவர்கள் தனியாக அறிக்கை அனுப்பியுள்ளார்கள் என்றால் சரிதான். அ.சா.ஆ.5 ஆவணத்தில் அந்த அறிக்கை எத்தனை மணிக்கு, யார்மூலம் அனுப்பப்பட்டது , எப்போது எந்த உயர்அதிகாரியால் பெறப்பட்டது என்ற விபரங்கள் இல்லை என்றால் சரிதான். நான் சமர்ப்பித்த எந்த அறிக்கையிலும் மூடைகளை பெற்றுக்கொண்டபடி எடைபோட்ட பிறகு மாதிரி எடுக்கப்பட்டதாக இல்லை என்றால் சரிதான். மாதிரிகள் எல்லாம் சட்டப்படி ஒரு குற்றவியல் நடுவரின் முன்பாகவோ அல்லது கைப்பற்றிய இடத்தில் உடனடியாக மாதிரி எடுக்கவேண்டும் என்றால் சரிதான். மூடைகள் கைப்பற்றியபின்னர் முறையாக சீல் வைக்கப்பட்டு எந்த ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டதோ அவர் பெயர், மற்றும் அங்கு இருந்த சாட்சிகளின் கையெழுத்து ஆகியவை இணைத்து சம்மந்தப்பட்ட காவல்துறையிடம் ஒப்படைக்கவேண்டும் என்றால் கியூபிராஞ்ச் ஆய்வாளர் அவ்வாறு கொண்டுவரவில்லை. நான் மாதிரிக்காக ஒவ்வொரு மூடையிலிருந்தும் தலா 50 கிராம் எடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்பினேன். அதனுடைய மொத்த எடை 15 மூடைகளிலிருந்தும் எடுத்த மாதிரிகளின் மொத்த எடை 750 கிராம் என்றால் சரிதான். நான் பகுப்பாய்வுக்கு மொத்தத்தில் 15 மாதிரிகள்தான் அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். என் முதல் விசாரணையில் சா.பொ.1 முதல் 30 வரை பகுப்பாய்விற்கு அனுப்பினேன் என தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் நீதித்துறைநடுவர் முன்பு மாதிரிகள் எடுக்க முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். போதைப்பொருட்களை பெறும்போது அதை பிரித்து பார்த்து அதனுடைய நிறம், அளவு,தன்மை ஆகியவற்றை குறிப்பெடுத்து புகைப்படங்கள் எடுக்கவேண்டும் என்றால் சரிதான். நானே நேரடியாக சென்று மல்கானாவில் மீதம் இருந்த போதைப்பொருட்களை ஒப்படைப்பு செய்தேன் என்றால் சரிதான். நான் ஒப்படைத்ததாக சொல்லப்படும் போதைப்பொருட்கள் என்று,

யாரிடம், எவ்வளவு ஒப்படைத்தேன் என்றும் யார் பெற்றுக்கொண்டார்கள் என்றும் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதுபோல் எந்தஒரு குறிப்போ, கடிதமோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அது இந்த வழக்கிற்கு பாதகமாக அமையும் என்பதால் ஞாபகம் இல்லை என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் புலன்விசாரணை செய்தற்கு போதைப்பொருள் தடுப்பு பிரிவுக்கென வழிகாட்டுதல்கள் உண்டு என்றால் சரிதான். அதன்படி மாதிரி எடுத்தது போக மீதம் உள்ள போதைப்பொருட்களை உடனடியாக மல்கானாவில் ஒப்படைக்கவேண்டும் என்று காட்டப்பட்டிருக்கிறது என்றால் அந்த வழிகாட்டியை நான் பார்த்ததில்லை. போதைப்பொருள் தடுப்பு பிரிவிற்கென்று உள்ளநடைமுறை அல்லது விதி பற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது நான் உயர் அதிகாரியின் வழிகாட்டுதலின் பேரிலும், அவர்கள் அறிவுரையின் பேரிலும் மல்கானாவிற்கு அனுப்பி வைத்தேன். நான் சட்டப்படி கடைப்பிடிக்கவேண்டிய காலக்கெடுவை கடைப்பிடிக்காமல் எடை அளவுகள் எல்லாமே பொய்யாக தயார் செய்ததன் காரணத்தினாலும், முன்னுக்கு பின் முரணாக உயர் அதிகாரியின் வழிகாட்டுதலின் படி நடந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பார்வை மகஜரில் அ.சா.ஆ.23 ல் சொல்லியுள்ள சந்தியாகப்பர் கோவில் முனைக்கு தென்வடலாக செல்லும் கடற்கரையிலிருந்து கடல்தண்ணீரில் சுமார் 500 மீட்டர் தொலையில் கிழமேலாக கடலில் டிபெரில் என எழுதப்பட்ட படகு நிறுத்தப்பட்டிருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்னநாளில் பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றும் மாதிரி வரைபடம் இந்த வழக்கிற்காக பின்னிட்டு வழக்கிற்கு ஏற்றாற்போல் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை நான் புலன்விசாரணைக்கு

எடுத்துகொண்டபின்னர் உடனடியாக சம்பவ இடம் சென்று ஆய்வு செய்யவேண்டும் என்றால் சரிதான். கியூபிராஞ்ச் ஆய்வாளர் எங்களிடம் இந்த வழக்கு சம்பந்தமாக ஆவணங்களும் பொருட்களும் ஒப்படைத்தாக சொல்லப்படும்போது கடலில் இருந்த வழக்கு சம்பந்தப்பட்டதாக சொல்லப்படும் வள்ளம் குறித்து எங்கு நிற்கிறது, யார் கட்டுப்பாட்டில் இருக்கிறது அதை எப்படி பாதுகாக்கவேண்டும் அடுத்த நடவடிக்கை என்ன எடுக்கவேண்டும் என்று எந்த ஒரு வேண்டுகோள் கடிதமோ, அறிக்கையோ கொடுக்கவில்லை என்றால் சரிதான். இன்றுவரை அந்த வள்ளம் எங்களுடைய பாதுகாப்பில் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த வள்ளம் அங்கு இல்லை என்றாலும் உடனடியாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டபின்னர் அங்கிருந்து எடுத்துசெல்லப்பட்டது என்றாலும் நீதிமன்ற அதிகாரியின் பார்வைக்குபின்னர் அந்த வள்ளம் அந்த இடத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவஇடத்திற்கு அருகில் உள்ள தருவைக்குளம் காவல்நிலையத்திலோ, கடலோர காவல்படை காவல்நிலையத்திலோ இந்த வழக்கு சம்பந்தப்பட்டதாக சொல்லப்படும் வள்ளத்தை பாதுகாக்க எந்த ஒரு வேண்டுகோள் கடிதமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் இருந்த அதிகாரிகள் அனுப்பும் பட்சத்தில் மேற்படி வள்ளம் சம்பவ இடமாக சொல்லப்படும் இடத்தில் நிற்கிறது என்பதை நான் ஊர்ஜிதமாக சொல்லமுடியுமா என்றால் நான் அங்கு பணியில் இருந்தவரை இருந்தது. நான் அங்கிருந்து பணி மாறுதல் பெற்று மூன்று வருடம் ஆகிறது. நான் பணி மாறுதல் பெற்றபிறகு அந்த வள்ளம் அங்கு இருக்கிறதா, இல்லையா என்று எனக்கு தெரியாது. நான் போதைப்பொருள் நுண்ணறிவுபிரிவில் இருக்கும்போதே வள்ளம் அங்கு இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட வள்ளத்தை நான் தான் நீதிமன்றத்திலிருந்து பாதுகாக்க பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான்.

அதை வழக்கு விசாரணையின்போது சரியாக ஒப்படைக்கவேண்டும் என்பது எனது கடமை என்றால் சரிதான். நான் மேற்படி வள்ளத்தை ஆய்வு செய்து வள்ளத்தில் இருந்த பொருட்கள் குறித்து விபரங்கள் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.12 சான்றிதழில் வள்ளம் 1 வது எதிரிக்கு சொந்தமானது அல்ல என சான்று கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மீன்வளம் மற்றும் மீனவநலத்துறை உதவி இயக்குநருக்கு வழக்கு சம்பந்தப்பட்டதாக சொல்லப்படும் வள்ளம் குறித்து விபரங்கள் கோர நான் அனுப்பிய வேண்டுகோள் கடிதம் அதன் நகலையோ, அசலையோ நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் சரியல்ல. அனுப்பியிருக்கிறேன். நான் சொல்வதுபோல் அனுப்பி வைக்கவில்லை என்றும் அப்படி அனுப்பி வைக்கப்பட்டிருந்தால் அதை ஆவணமாக குறியிடப்பட்டிருக்கும் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மீன்வளம் மற்றும் மீனவநலத்துறை உதவி இயக்குநரால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அது **எ.சா.ஆ.-1** ஆகும். அ.சா.ஆ.12 மற்றும் எ.சா.ஆ.1 லும் ந.கா.எண் என குறிப்பிடும் போது 2018 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2019 ம் ஆண்டு வழக்கில் சம்பந்தப்பட்டதாக சொல்லப்படும் வள்ளத்தின் பதிவு எண் அதிகாரிகளின் முறையான ஆய்வுக்கு பின்பு ரத்து செய்யப்பட்டுள்ளது என்றும் அந்த எண்ணை 2019 க்கு பிறகு பயன்படுத்தமுடியாது என்ற காரணத்தினால் நடப்பு கணக்கு எண் 2018 என குறிப்பிட்டு இந்த வழக்கிற்கு ஏற்றாற் போல ஒரு ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எந்த தேதியில் வேண்டுகோள்கடிதம் கொடுத்து சான்றிதழ் பெற்றுக் கொண்டேன் என்று கூறமுடியுமா என்றால் மூன்று நாட்கள் கழித்து பெற்றதாக ஞாபகம் இருக்கிறது. இந்த வழக்கில் நான் விசாரித்ததாக சொல்லப்படும் சாட்சிகள் அனைவரையும் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் விசாரிக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டு

நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தப்பட்ட பொருட்களையும், ஆவணங்களையும் கியூபிராஞ்ச் ஆய்வாளர் ஒப்படைத்த விபரம் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். வேறு யாரும் ஒப்படைத்ததாக சொன்னால் அது தவறு. ஜீவமணி தர்மராஜின் வாக்குமூலத்தில் அவர் ஒப்படைத்தாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரிதான். அதேபோல் வில்லியம்பெஞ்சமின்,கந்தசாமி, செல்வக்குமார், சங்கர், ராமர், இருதயராஜ்குமார் ஆகியோர்கள் அவர் அவர் வாக்குமூலங்களில் அவரவர்கள் கொண்டுவந்து ஒப்படைத்ததாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரிதான். நான் சொன்னபடி வாக்கு மூலங்கள் எல்லாம் சாட்சிகளை விசாரிக்காமல் பொய்யாக தயார் செய்து copy, paste செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ இடமாக சொல்லப்படும் இடத்திற்கு சென்று யாரையாவது விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேனா என்றால் விசாரிக்கவில்லை. வாக்குமூலம் பதிவு செய்யவும் இல்லை. மீன் ஏலம் விடும் இடத்தில் இருந்த எடை இயந்திரத்தில் எடைபோட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எடைபோட்டதாக சொல்லப்படும மீன் ஏல கடை குறித்தோ,எப்படி எடைபோட்டார்கள் என்பது குறித்தோ நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். தருவைக்குளம் போலீசார் SBCID காவல்நிலையத்தில் யாரையும் வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இசக்கியம்மாள் என்பவரது வாக்குமூலத்தில் த/பெ.முருகேசன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் வாங்கியுள்ள மற்ற சான்றிதழ்களில் க/பெ.முருகேசன் என்றுள்ளது என்றால் சரிதான். இதில் எந்த முருகேசனையாவது விசாரித்து வாக்குமூலம் பெற்றேனா என்றால் இல்லை. முருகேசனை விசாரிக்கும் பட்சத்தில் உண்மைவிபரம் தெரியவரும் என்ற காரணத்தினால் அவரை விசாரிக்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கியூபிராஞ்சிலிருந்து வழங்கிய அத்தாட்சியில் சாட்சிகளாக

போடப்பட்டவர்களை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. கிராமஉதவியாளர் சம்பவஇடத்திற்கே செல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. மாதிரி எடுத்ததாக சொல்லப்படும் அத்தாட்சியில் 1 வது எதிரியை தவிர எந்த எதிரியின் கையொப்பமும் இல்லை என்றால் சரிதான். மற்ற எதிரிகளின் கையொப்பம் பெறவில்லை என்பதற்கு வேறு காரணம் எதுவும் உண்டா என்றால் இல்லை. வழக்கு சம்பந்தப்பட்ட வள்ளம் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளதா , இல்லையா என்பது குறித்து மீன்வளதுறை அதிகாரிகளிடமோ, வல்லுநர்களிடமோ எந்த அறிக்கையும் பெறவில்லை என்றால் சரிதான். கியூபிராஞ்ச் ஆய்வாளர் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றும் எந்த வாகனத்தில் பொருட்களை கொண்டுவந்தோம் என்றும் தனி அறிக்கையிலோ, விரிவான அறிக்கையிலோ, வாக்குமூலத்திலோ சொல்லவேண்டும் என்றால் சரிதான். எந்த வாகனத்தில் பிடிப்பட்டதாக சொல்லப்படும் போதைப்பொருட்களை கொண்டுவந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். கிராமநிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் ஆகியோரை கியூபிராஞ்ச் ஆய்வாளர் எந்த தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டார் என்ற விபரங்கள் எதுவும் என் விசாரணையில் துலங்கவில்லை என்றால் சரிதான். இசக்கியம்மாள் தன்னுடைய வழக்கு சம்பந்தப்பட்ட பதிவு எண் கொண்ட படகை விற்றதாக சொல்லியுள்ள நபர்கள் குறித்து நான் எந்த விசாரணையும் செய்யவில்லை என்றால் சரிதான். யாருக்கு விற்றார்கள் என்று விசாரித்து உண்மை தெரியவரும்பட்சத்தில் வழக்கின் உண்மை தன்மை பாதிக்கும் என்ற காணரத்தினால் அது குறித்து நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் மாதிரி எடுத்தபிறகு அந்த மூடைகளை சீல் வைத்து சட்டவிதிகளின் படி ஒப்படைத்தோமா என்றால் ஒப்படைத்தோம். தற்போது கவர்கள் மாற்றியுள்ளதால் அதில் சீல் இல்லை. நான் சொன்னபடி சீல் வைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

கியூபிராஞ்ச் ஆய்வாளர் என்னுடைய விசாரணையில் சோதனைக்கருவிகள், மடிக்கணினி, பிரிண்டர் ஆகியவைகளை எடுத்து சென்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட வாக்குமூலங்கள், ஆவணங்கள் அனைத்தும் நான் சொன்னதுபோல் தயார் செய்யாமல் பின்னிட்டு வழக்கிற்காக தயார் செய்ததால் குறித்தநேரத்தில் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. அத்தாட்சியில் சாட்சியாக உள்ள கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளரின் மேலதிகாரிகளை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெற்றேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக பிரிவு-57 ன் படி தயாரித்த விரிவான அறிக்கையை தவிர வேறு தனி அறிக்கை எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். சிவா என்பவர் குறித்து நான் விசாரித்ததாக சொல்லும் வாக்குமூலங்கள் எதையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய குற்றப்பத்திரிக்கையில் சம்பவஇடமாக கீழவைப்பார் கடலில் நிறுத்தப் பட்டிருந்ததாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். நான் எப்போதும் ஒரே மாதிரியாக கையொப்பம் செய்வேன் என்றால் மாறிமாறி வரும். மாதிரி பொட்டலங்களில் P9(S17, S18), P10(S20), P15 (S30, S29), P14(S28), P13(S25), P12(S24, S23),P11(S21) இந்த மாதிரிகளில் எல்லாம் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு எந்த தேதியில், எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 12.10.2021 ம் தேதி 12.00 மணிக்கு சென்றேன். அந்த கடல் பகுதி எந்த நேரமும் மீன் பிடிக்கக்கூடிய பகுதி என்றால் சரிதான்.நான் வள்ளம் சம்பந்தமாக உண்மையை நிலையை அறிந்து தெரிந்துகொள்ள மீன்பிடிதுறை மேலாண்மை, மீன்வள மற்றும் மீனவநலத்துறையை அணுகி எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரிதான். எதிரிகள் யாரும் மீன்பிடிக்கக்கூடிய தொழிலில் ஈடுபடுபவர்களா, அவர்களுக்குரிய அடையாள அட்டை போன்ற எந்த விபரமும் நான் சம்பந்தப்பட்ட

துறையிலிருந்து கேட்டு பெறவில்லை என்றால் சரிதான். பொதுவாக தருவைக்குளத்தை சேர்ந்த மீனவர்கள் தூத்துக்குடி செல்வதோ, தூத்துக்குடி மீனவர்கள் தருவைக்குளம் வருவதோ இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் படகுகள் தயார் செய்யும் மற்றும் பழுதுபார்க்கும் இடம் உள்ளது என்றால் சரிதான். பழுதுபார்க்கும் இடத்தில் இருந்த நபர்களிடம் இந்த படகு எதற்காக வந்தது எப்படி வந்தது என நான் விசாரித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதைப்போல் 1 வது எதிரிக்கும், படகு மற்றும் போதைப்பொருளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் உண்மைக்குற்றவாளிகள் மற்றும் அவர்கள் மூலம் வந்த போதைப்பொருட்களை வைத்து அவர்களை மறைத்துவிட்டு இந்த எதிரிகளின் மீது பொய்யாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தூத்துக்குடி மற்றும் தருவைகுளம் மீன்பிடிப்பவர்களிடையே மிகப்பெரிய போராட்டம் ஏற்பட்டு, மோதல் ஏற்பட்டு அது சம்பந்தமாக இரண்டு தரப்பினரையும் கட்டுப்படுத்தும் நோக்கில் கியூபிராஞ்ச் அதிகாரிகளின் ஆலோசனை படி நீண்டநாள் காவலில் வைக்கக்கூடிய குற்றமாகிய போதைப்பொருள் வழக்கில் நிரபராதிகளான இவர்களை பொய் வழக்கு போட்டு அதற்கு ஏற்றாற்போல ஆவணங்களை தயார் செய்து வழக்கை ஜோடித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் உண்மையை தன்மையை மறைக்கும் பொருட்டு அவசரகதியாக மேற்கொண்ட புலன்விசாரணை நடவடிக்கையால் கட்டாயமாக கடைப்பிடிக்கக்கூடிய சட்டப்பிரிவுகளை கடைப்பிடிக்காமல் அவசரகதியாக இறுதி அறிக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வள்ளம் குறித்து உண்மையை மறைக்கும் விதமாக கையிருப்பு சாட்சியான இசக்கியம்மாளை சாட்சியாக போட்டுவிட்டு முருகேசன் என்பவரை விசாரிக்காமல் தவிர்த்திருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் தயாரித்ததாக சொல்லும் மேலும் இரண்டு தனி அறிக்கைகள் மாறுதல்

தகவல்அறிக்கைகள் ஆகியவைகள் வழக்கிற்கு குந்தகம் ஏற்படுகின்ற காரணத்தினால் குறியீடு செய்யாமல் தவிர்த்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. பிடிபட்டதாக சொல்லப்படும் போதைப்பொருள் சரிவர எடைபோட்டு பார்க்காமல் வழக்கிற்காக கியூபிராஞ்ச் சொல்ல தகவல் அடிப்படையை வைத்து தகுந்த முறையில் புலன்விசாரணை செய்யாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 வது எதிரி நான் சொல்வதைப்போல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கான முக்கியமான சாட்சிகள் யாரையும் விசாரிக்காமல் தனிப்பட்ட சாட்சியங்களை விசாரிக்காமல் முக்கியமான ஆவணங்களை எல்லாம் நீதிமன்றத்திற்கு அனுப்பாமல் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. கியூபிராஞ்ச் ஆய்வாளர் கொடுத்ததாக சொல்லப்படும் எந்த அறிக்கையிலும் இந்த எதிரிகள் போதைப்பொருட்களை இலங்கைக்கு கடத்தி சென்று அதிக லாபத்திற்கு விற்பனை செய்து பணக்காரர்களாக திட்டம் தீட்டியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். வள்ளத்தின் பதிவெண்ணுக்குரிய ஆவணங்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறையிலிருந்தும் எதிரிகளை இந்த வழக்கில் சேர்க்கவேண்டும் என்பதற்காக அந்த ஆவணங்களை நான் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களை நீதிமன்றம் பார்க்கும் பட்சத்தில் அந்த வள்ளத்தின் தற்போதைய நிலை, அந்த பதிவெண்ணின் உரிமையாளர் மற்றும் அதை பயன்படுத்துவோர் போன்ற விபரங்கள் தெரியவரும் என்பதால் அதை வேண்டுமென்றே மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் கைப்பற்றியதாக சொல்லப்படும் போதைப்பொருளை மாதிரி எடுத்ததற்குப் பின்பு மாதிரி 750 கிராம் போக 524 கிலோ 250 கிராம் மல்கானாவில் ஒப்படைத்துள்ளேன்.

<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

தூத்துக்குடியில் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு சுமார் 4 நாட்கள் காலதாமதமாக சென்றதற்கு ஏதேனும் காரணங்கள் உள்ளதா என்றால் எதிரிகளை நீதிமன்ற காவல் அடைப்பு பணி இருந்ததாலும், கைப்பற்றப்பட்ட பொருட்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கும் பணி இருந்ததாலும் உடனடியாக சம்பவ இடம் செல்ல முடியவில்லை. போலீஸ் நிலையாணைப்படி குற்றசெயல் குறித்து தகவல் கிடைத்தவுடன் சம்பவ இடம் சென்று பார்வையிட வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கு குறித்து மேற்படி சம்பவ இடத்தை வழக்கு பதிவு செய்தபின்னர் எத்தனை முறை ஆய்வு செய்ய சென்றேன் என்றால் வாரம் இரு முறை செல்வது வழக்கம். 12.10.2021 ம் தேதி ஆய்வு செய்ததை தவிர பிற தினங்களில் ஆய்வு செய்ததாக ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் ஆய்வு செய்தபோது கண்ணால் கண்ட விசயங்களை குறிப்பெடுத்துக் கொண்டேன் என்றால் சரிதான். வள்ளம் இயந்திரம் மூலம் இயங்கும் வள்ளம் என பார்த்து குறித்துக்கொண்டேன் என்றால் சரிதான். அதில் சமையலுக்கு பயன்படுத்தும பொருட்கள், மீன்பிடிப்பதற்கு பயன்படும் பொருட்களை பார்வையிட்டீர்களா என்றால் அவ்வாறு பொருட்கள் இல்லை. வள்ளத்தை ஏறி உள்ளே பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். அந்த வள்ளத்தில் எத்தனை அறைகள் இருந்தது என்றால் மூன்று அறைகள் இருந்தது. இந்த வழக்கில் விசாரணை செய்த அ.சா.1 கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருள் எந்த அறையிலிருந்து கைப்பற்றப்பட்டது என அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். தருவைக்குளம் சந்தியாகப்பர் ஆலயத்திற்கும் கீழ வைப்பாருக்கும் இடையே சுமார் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. அ.சா.ஆ.23 ஆவணத்தில் ஒயிட்னர் பயன்படுத்தி திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வள்ளத்தின் பதிவு எண்ணும் திருத்தம்

செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கின் பார்வைமகஜர், வரைபடம், 161(3) நான் பதிவு செய்த வாக்குமூலங்கள் ஆகியவை நான் தாக்கல் செய்த குற்றப்பத்திரிக்கையுடன் 31.03.2022 ம் தேதி வந்தடைந்துள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் படிவம்-91 காலதாமதமாக 13.10.2021 ம் தேதி நீதிமன்றத்தை வந்தடைந்துள்ளது என்றால் சரிதான். 2021 ம் ஆண்டு சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தினத்தில் அந்த வள்ளமானது யாருடைய பெயரில், பயன்பாட்டில் இருந்தது என்பதற்கான எந்தஒரு சாட்சியளோ, ஆவணங்களோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காகிதஉறைகள் பல்வேறு நிறங்களில் உண்டு என்றால் சரிதான். மாதிரிகள் வைக்கப்பட்டுள்ள உறைகள் காக்கிகலரில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் பொருளானது எந்த மாநிலத்தில் வாங்கப்பட்டது, சம்பவ இடத்திற்கு எந்த வாகனத்தில் கொண்டுவரப்பட்டது குறித்து ஏதேனும் விசாரணை செய்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. கீழவைப்பாரில் இருந்து வள்ளம் நின்றிருந்த இடம் வரை கடத்தப்பட்டதாக சொல்லப்படும் பொருளை கொண்டுசென்ற வாகனம் குறித்து துப்பு எதுவும் துலக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களை உதவி ஆய்வாளர் திருமதி.அனித்தாவேணி என்பவர் மூலமாக காலை11.00 மணி அளவில் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அதற்கு முன்பாக அ.சா.1 விஜயஅனிதா என்னிடம் எந்த ஆவணங்களும், சான்றுப்பொருட்களும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மீனவ கிராமங்களில் ஏற்பட்ட பதட்டத்தை தடுப்பதற்காக கியூபிராஞ்ச் போலீசாரின் தூண்டுதலின் பேரில் இந்த எதிரிகள் மீது தவறான பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை மனதை ஒருமுகப்படுத்தி விசாரணை செய்யாமலும், ஆவணங்களை பரிசீலனை செய்யாமலும் மேல்அதிகாரிகளை

திருப்திபடுத்த புள்ளிவிபர கணக்கிற்காக வழக்கு எதிரிகளின் மீது பொய்யாக போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் எதிரிக்கும் இந்த வழக்கு சம்பந்தமாக நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்பில்லை என்றால் சரியல்ல. மேலும் 1 வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணையை 2ம் எதிரி அப்படியே ஏற்றுக்கொள்வதாக 2 வது எதிரியின் வழக்கறிஞர் கூறி குறுக்கு விசாரணையை முடித்துக்கொண்டார்.

## 3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.1 கொடுத்ததாக சொல்லப்படும் தனி அறிக்கை மற்றும் பிரிவு-57ன் படியான விரிவான அறிக்கை ஆகியவற்றில் அவருக்கு வந்த தகவலை எழுதி பதிவு செய்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் அ.சா.1 எனது தகவலர் தூத்துக்குடி தருவைக்குளம் சந்தியாகப்பர் கோவில்முனை கடற்கரைப்பகுதியில் டிபெரில் என்று எழுதப்பட்ட **IND- TN** – 12-**MO** 2669 என்ற பதிவெண்கொண்ட நீலநிறவள்ளத்தில் கஞ்சா கடத்துவதாகவும், நேரில் சென்றால் பிடித்துவிடலாம் என்று சொன்ன தகவலை அப்படியே தகவல் அறிக்கையாக பதிவு செய்ததாக சொல்லியுள்ளாரா என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தகவலில் வள்ளம் பற்றிய குறிப்புகள் பெயர், பதிவெண், நிறம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.1 என்னிடம் விசாரணையில் குறிப்பிட்டுள்ள உண்மையான தகவலை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் தகவல் மற்றும் விரிவான அறிக்கையில் என்னுடைய விசாரணையில் அ.சா.1 சம்பவ இடத்திற்கு செல்லும் முன்பு காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களிடமோ, நீதித்துறை நடுவரிடமோ முன் அனுமதி கடிதம் அனுப்பி அனுமதி பெற்று சென்றதாக குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். வழக்கின் தகவல்

மற்றும் எனது விசாரணையில் அ.சா.1 முன் அனுமதி பெறாமல் கண்காணிப்பிற்கு சென்றதற்கான நம்பத்தகுந்த காரணங்கள் எதையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கின் தகவலில் சந்தேக நபர்களின் பெயர்கள் அவர்களின் அடையாளங்கள் குறித்து எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். தகவலாளியும் சம்பவ இடத்திற்கு உடன் சென்றதாகவே சாட்சிகள் எனது விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் அ.சா.1 ன் உயர் அதிகாரியான DSP கியூபிராஞ்ச் அவர்களை இந்த சாட்சிகள் பட்டியலில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவரை சேர்த்திருந்தால் மட்டுமே இந்த வழக்கில் கட்டாயமாக்கப்பட்ட போதைப்பொருள் சட்ட நடைமுறை 42(1)மற்றும் 42(2)ஆகியவைகள் பின்பற்றப்பட்டதா என்ற உண்மை நிலை தெரியவரும் என்றால் சரியல்ல. வழக்கில் அ.சா.1 அத்தாட்சியில் கைப்பற்றி ஆஜர் செய்ததாக சொல்லப்படும் சொத்துக்களை மீண்டும் காவல்நிலையத்தில் வைத்து பிரித்து பார்த்து மாதிரிகள் எடுத்ததாக கூறுவது தவறான செயலாகும் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு வேறு காவல்நிலையத்திலிருந்து தங்களது காவல்நிலையத்திற்கு பொருட்கள் ஒப்படைக்கப்பட்டால் அதற்காக ஒரு Inventory பட்டியல் தயார் செய்து ஒப்படைத்ததிருக்கவேண்டும் என்றும் அதன் மீது எங்களது காவல்நிலைய முத்திரையை பதிக்க வேண்டும் என்றும் போதைப்பொருள் சட்ட விதிகளில் கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 08.10.2021 தேதியன்று காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் அத்தாட்சியில் கியூபிராஞ்ச் ஆய்வாளரோ, அல்லது காவலரோ யாரும் சாட்சி கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.18 ஆவணத்தின் உள்பகுதியில் வழக்கு சொத்துடன் சேர்த்து தாக்கல் செய்யும்படி நீதித்துறை நடுவர் மேற்குறிப்பு செய்து 09.10.2021 அன்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் படிவம்-91 அனைத்தும் அ.சா.ஆ.14 முதல் அ.சா.ஆ.21

வரை 13.10.2021 ம் தேதி மாவட்ட நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு 13.10.2021 ம் தேதியன்று சொத்துக்கள் ஒப்படைக்கப்பட்டு RPRNo கொடுக்கப்பட்டதாக விபரங்கள் உள்ளது என்றால் சரிதான். 18.10.2021 தேதியன்று தலைமைக்காவலர்-நாராயணன் வழக்கின் சொத்தின் மாதிரியை பெற்றுச் சென்று 20.10.2021 ம் தேதியன்று ஆய்வகத்தில் ஒப்படைத்துள்ளார் என்றால் சரிதான். இடைப்பட்ட காலங்களில் வழக்கு சொத்துக்களின் பாதுகாப்பு குறித்த ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாதிரி பொட்டலங்களை ஆய்வகத்தில் ஒப்படைக்கும்போது ஆய்வகத்திலிருந்து ஒரு ரசீது கொடுப்பார்கள் என்றும் அந்த ரசீதில் ஆய்வகத்தில் ஒப்படைத்த காவலர்களின் கையொப்பம் பெற்று பகுப்பாய்வகத்தில் உள்ள அலுவலரும் கையொப்பம் செய்து கொடுப்பார் என்றால் சரிதான். அந்த ரசீதை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பகுப்பாய்வுக்கான ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்திலும் 08.10.2021 ம் தேதியன்று என்னால் தயார் செய்யப்பட்டதாக சொல்லப்படும் அத்தாட்சியிலும் தூாத்துக்குடி NIB சீல் பதிக்கப்படவில்லை என்றால் சரிதான். பகுப்பாய்வாளருக்கான வேண்டுகோள் கடிதத்தில் NIB சீல் தூாத்துக்குடி மாதிரி முத்திரை பதித்து அனுப்பியிருந்தால் மட்டுமே மாதிரி பொட்டலங்களின் உள் தங்களது காவல்நிலைய மாதிரி முத்திரை உள்ளதா இல்லையா என்று ஆய்வகத்தில் ஒப்பீடு செய்யமுடியும் என்றால் சரிதான். வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மாதிரி பொட்டலங்களை நிலையாணைப்படி 72 மணி நேரத்திற்குள்ளாக ஆய்வகத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். மல்கானாவில் வழக்கின் சொத்துக்களை வைத்திருந்தற்கு அத்தாட்சியாக மல்கானாவில் கொடுக்கும் ரசீதை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மல்கானாவில் பொறுப்பு அலுவலராக உள்ள நபரை விசாரித்து சாட்சிகளின் பட்டியலில் சேர்க்கவில்லை என்றால்

சரிதான். பகுப்பாய்வு அறிக்கையில் ஆய்வுக்கு பெறப்பட்ட மாதிரி பொட்டலங்களின் மீது தூத்துக்குடி NIB சீல் இருந்ததாக குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் பகுப்பாய்வுக்கு அனுப்பியதாக சொல்லப்படும் பொட்டலங்கள் அனைத்தும் எங்கள் காவல்நிலையத்தில் கையிருப்பில் இருந்த கஞ்சா பொட்டலங்கள் என்றால் சரியல்ல. சா.பொ.31 முதல் 45 வரையுள்ளவை கஞ்சா பொருட்களே இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சொத்துக்களுக்கும் இந்த எதிரிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இந்த எதிரியை நான் சொன்னதுபோல், அ.சா.1 தங்களிடம் ஒப்படைத்து நிலையத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கட்டாயமாக்கப்பட்ட போதைப்பொருள் விதிகள் பின்பற்றப் படவில்லை என்றால் சரியல்ல. தூத்துக்குடி நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு சொத்துக்களை ஒப்படைக்கும்போது புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மாதிரி பொட்டலங்களின் எடை குறித்து நீதித்துறை நடுவர் முன்பு எடை போட்டு பட்டியல் எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். சா.பொ.1 முதல் 30 வரைஉள்ளவற்றில் நீதித்துறை நடுவரின் கையொப்பம் எதுவும் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு அவைகளில் கையொப்பம் இட்டு உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த எதிரிக்கும் மற்ற எதிரிகளுக்கும் இந்த வழக்கு குறித்து எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>4 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எங்கள் காவல்நிலையத்தில் போதைப்பொருளை பரிசோதனை

செய்வதற்கான உபகரணங்களும், எடைபோடும் உபகரணங்களும் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சான்று பொருட்களை பெறும்போது எங்கள் காவல்நிலையத்தில் உள்ள உபகரணங்களை கொண்டு பரிசோதித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக கைப்பற்றப்படும் கஞ்சாக்களில் விபரசிலிப் ஒட்டப்படும் என்றால் சரிதான். அந்த விபர சிலிப்புகளில் குற்ற எண், கைப்பற்றப்பட்ட இடம், யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது, எந்த சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது என்ற விபரம் எழுதப்பட்டு அதில் சாட்சிகளும், நானும், கையொப்பம் இடுவோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சா.பொ.2 மற்றும் 24 முதல் 29 வரையுள்ள சான்றுப்பொருட்களில் 4 ம் எதிரியின் கையொப்பம் எதுவும் இல்லை என்றால் சரிதான். சா.பொ.31 முதல் 45 வரை உள்ள மூட்டைகளில் விபரசிலிப் ஒட்டப்பட்டவில்லை என்றால் சரிதான். சான்றுப்பொருள் 31 முதல் 45 வரை உள்ள மூட்டைகளில் எதிரிகளின் கையொப்பம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பார்வைமகஜரில் வள்ளத்தின் நீளம், அகலம், உயரம், பரப்பளவு குறித்து எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜரில் வள்ளம் கடல்நீரில் எவ்வளவு ஆழத்தில் இருந்தது என்பது குறித்தும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையிலிருந்தும், அ.சா.1 தாக்கல் செய்துள்ள விரிவான அறிக்கையிலும் கடற்கரையிலிருந்து கடலில் உள்ள வள்ளத்திற்கு கியூபிராஞ்ச் போலீசார் எந்த வாகனத்தில் சென்றார்கள் என்ற விபரமும் கடலில் இருந்து வள்ளத்திற்குள் எப்படி சென்றார்கள் என்ற விபரமும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பார்வைமகஜர், வரைபடம் தயார் செய்தபோது வள்ளத்தின் நிலை குறித்து புகைப்படம் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வள்ளத்தில் உள்ள இஞ்சினை வள்ளத்துடன் சேர்த்து

புகைப்படம் எடுத்தேனா என்றால் எடுத்தேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. புகைப்படத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு தனிப்பட்ட காரணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். வள்ளத்தில் உள்ள இஞ்சினுக்கென்று தனியாக எண்கள் கொடுக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அந்த இஞ்சினில் உள்ள எண்ணை வைத்து அந்த இஞ்சினின் வள்ளத்தின் உரிமையாளர் யார் என்று கண்டுபிடிக்கமுடியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்ப்டடதாக சொல்லப்படும் வள்ளத்தின் இஞ்சினின் எண் என்னால் கைப்பற்றப்படவில்லை. அதற்குரிய ஆவணங்களையும் நான் கைப்பற்றப்படவில்லை. அந்த வள்ளத்தின் இஞ்சின் எண்ணை வைத்துவிசாரித்தால் அந்த வள்ளத்தின் உரிமையாளர் யார் என கண்டுபிடிக்க முடியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் வள்ளத்தின் உரிமையாளரை கண்டுபிடிக்க எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எனது விசாரணையிலோ, நான் தயாரித்த ஆவணங்களிலோ இந்த வழக்கு சம்பந்தமான வள்ளத்தில் ஓட்டை இருந்ததாக தெரியவரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வள்ளமானது ஓடாத நிலையில் உள்ள கப்பல் கட்டும் பணிமனையில் இருந்த உரிமையாளர் தெரியாத வள்ளத்தை இந்த வழக்கிற்காக பயன்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. சம்பவ காலத்தில் கியூபிராஞ்ச் வாகனத்தை யார் ஓட்டினார்கள் என்ற விபரம் குறித்து என்னுடைய விசாரணையிலோ, அ.சா.1 ன் விரிவான அறிக்கையிலோ எனக்கு தெரியவரவில்லை என்றால் சரிதான். வாகனத்தின் லாக்புக்கை பார்த்தால் என்றைய தேதியில், எங்கு யாரால் வாகனம் ஓட்டப்பட்டது என்று தெரியவரும் என்றால் சரிதான். இந்த வழக்கில் லாக்புக்கைகைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்னபடி சொன்ன நேரத்தில் அ.சா.1 மற்றும் அவருடன் சேர்ந்த காவலர்களோ சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும்

அதனால் தான் மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கில் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 ல் தயாரிக்கப்பட்ட விரிவான அறிக்கையில் கியூபிராஞ்ச் உயர் அதிகாரிக்கு அனுப்பப்பட்டதாக தகவல் எதுவும் இல்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.26 புகைப்படங்கள் யாரால், எப்போது எடுக்கப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எனது வழக்கு கோப்பில் இல்லை என்றால் சரிதான். படிவம்-91 (அ.சா.ஆ.13 முதல் அ.சா.ஆ.21 வரை) சாட்சி கையொப்பம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான். எனது புலன்விசாரணையிலோ, அ.சா.1 கொடுத்த விரிவான அறிக்கையிலோ கைப்பற்றப்பட்ட கஞ்சா வள்ளத்தின் எந்த பகுதியில் இருந்தது என புலப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.3 ஆவணத்தில் சான்றுப்பொருட்கள் அனைத்தும் கடற்கரையில் வைத்து கைப்பற்றப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். நான் தயார் செய்த பார்வைமகஜர் மற்றும் வரைபடத்தில் மீன் ஏலமிடும் சந்தை எந்த திசையில் எவ்வளவு துாரத்தில் உள்ளது என சொல்லவில்லை என்றால் சரிதான். எனது புலன்விசாரணையிலோ, அ.சா.1 கொடுத்த விரிவான அறிக்கையிலோ எந்த கடையில் வைத்து பொருட்கள் எடைபோடப்பட்டது என்று தெரியவரவில்லை என்றால் சரிதான். எடைபோடப்பட்ட கடையின் உரிமையாளரை விசாரித்து வாக்குமூலம் எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்னபடி சொன்னவிதத்தில் வழக்கின்சான்றுப்பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றாலும் அது சொன்னவிதத்தில் எடைபோடப்படவில்லை என்றாலும் அது வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.3 ஆவணத்தில் 4 ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சான்றுப்பொருட்களில் சிம்கார்டு எதுவும் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் தயாரித்த ஆவணங்களிலும் 4 ம் எதிரியின் சிம்கார்டு கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால்

சரிதான். 4ம் எதிரிக்கு தயார் செய்யப்பட்ட கைது குறிப்பில் கைது செய்யப்பட்ட விபரங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. தொலைபேசிமூலம் தகவல் சொல்லப்பட்டது. எனது விசாரணையில் 4ம் எதிரியின் பெற்றோர்கள் சம்பந்தமாகவோ, அவர்கள் தொலைபேசி சம்பந்தமாகவோ விபரங்கள் எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எங்கள் காவல்நிலையத்தில் 10.00 மணியிலிருந்து 1.00 மணி வரை சான்றுப்பொருட்கள் யாருடைய பாதுகாப்பில் இருந்தது என்பதற்கான ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொதுவாக வழக்கு சம்பந்தப்பட்ட பொருட்களை காவல்நிலையத்தில் ஒப்படைக்கும்போது காவல்நிலைய பொறுப்பு அதிகாரிதான் சான்று பொருட்களை பாதுகாப்பார் என்றால் சரிதான். அந்த பொருட்களை பொறுப்பு அதிகாரி பெற்றுக்கொண்டு SHO சீல் வைத்து அதில் கையொப்பம் இட்டு பாதுகாக்கவேண்டும் என்றால் சரிதான். பொறுப்பு அதிகாரி எழுத்தர் இருப்பாரா என்றால் SI மற்றும் ஆய்வாளர் இருக்கலாம். 10.10 மணியிலிருந்து 1.00 மணி வரை காவல்நிலைய பொறுப்பதிகாரியாக யார் இருந்தார் என்றால் நான் தான் இருந்தேன். வழக்கு சம்பந்தப்பட்ட பொருட்களை எப்போது என்னிடம் ஒப்படைத்தார்கள் என்றால் 11.00 மணிக்கு ஒப்படைத்தார்கள். 11.00 மணிக்கு பொருட்களை ஒப்படைத்தபோதே அந்த பொருட்களை பெற்றுக் கொண்டதற்கான ஆவணங்களை தயாரித்தேன் என்றால் சரிதான். நான் சொன்னபடி சொன்ன நேரத்தில் சொன்னவிதத்தில் பொருட்கள் எதுவும் ஒப்படைக்கப்படவில்லை என்றாலும் இந்த வழககில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சான்றுப்பொருட்களும் ஆவணங்களும் பின்னிட்டு இந்த வழக்கிற்காக ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் சரிவர புலன்விசாரணை செய்யாமல் சரியான சட்ட நடவடிக்கையை பின்பற்றாமல் குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேலும்

1 வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 4 வது எதிரி தரப்பு வழக்கறிஞர் கூறி தனது குறுக்கு விசாரணையை முடித்துக்கொண்டார்.

**5 ம் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை**

**நீதிமன்ற நேரமின்மையின் காரணமாக 5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**